## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| **O.S. No. 350/2019** | **Date : 11.03.2026** | **DW2** |
| Name: செந்தில்குமார் | S/o. மணி | |

**1 முதல் 5 வரையான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். எனவே வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எனக்கு வழக்கில் உள்ள விவரங்கள் அனைத்தும் தெரியும் என்றால் சரிதான். வழக்கின் வாதியும் 1ம் பிரதிவாதி தேவராஜும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மனைவி என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மகன் என்றால் சரிதான். 1 முதல் 3 வரையான பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களும் வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு சொந்தமான பூர்வீக சொத்துக்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் வழக்கு நிலுவையில் இருந்தபோதுதான் தாவா சொத்தை கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருந்த விவரம் எனக்கு தெரியாது. 4ம்பிரதிவாதி விற்பனை செய்த போது வழக்கு நிலுவையில் உள்ள விவரத்தை சொன்னாரா என்றால் இல்லை. வாங்கியபிறகு தான் சொன்னார். நான் சொத்தை கிரயம் பெறும்போது மூல ஆவணங்களை பார்த்து கிரயம் பெற்றேனா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் 1982ம் வருடத்திய பாகப்பிரிவினை பத்திரம் குறித்து சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்துதான் கிரயம் பெற்றதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பத்திரம் வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் அவர்களது குடும்ப உறுப்பினக்ளுக்கு இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் வாதிக்கும் 1ம் பிரதிவாதியின் தகப்பனாரான முத்தா கவுண்டர் என்பவருக்கு 7.57 ஏக்கர் நிலம் பாத்தியப்பட்டது என்றால் அது பற்றிய விவரம் எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தில் ஆலமரத்துப்பட்டி கிராமத்தில் 4 ஏக்கர் 75 செண்ட் நிலம் வாதிக்கு ஒதுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அதே பத்திரத்தில் ஆலமரத்துப்பட்டி கிராமத்தில் 2 ஏக்கர் 82 செண்ட் நிலம் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி 2 ஏக்கர் 82 செண்ட் பூமி சர்வே எண். 1245/5 என்ற எண்ணில் 3.16 ஏக்கர்

பூமியும் சர்வே எண். 1245/4 யில் உள்ள பொது கிணறும் அதனை ஒட்டியுள்ள வாய்க்காலிலும் 1/6 பங்கு உள்ளது. அதனுடைய கிணறு சர்விஸ் எண்.355 யில் 1/3 யில் ஒரு பாகம் பங்குரிமை உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண். 1245/4 யின் பழைய சர்வே எண் என்னவென்றால் அது குறித்து தெரியவில்லை. தாவா சொத்தின் பழைய சர்வே எண். 641 யில் மொத்தமாக 15 ஏக்கர் 5 செண்ட் பூமி இருந்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்சொன்ன 15 ஏக்கர் 5 செண்ட் பூமியை முத்தா கவுண்டரும் அவருடன் பிறந்தவர்களும் 1965 ம் ஆண்டு பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 1982 ம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தில் ஆலமரத்துப்பட்டி கிராமத்தில் E ஷெட்யூல் சொத்தாக வாதிக்கு 4 ஏக்கர் 75 செண்ட் பூமி ஒதுக்கப்பட்டது என்றால் பத்திரத்தில் அவ்வாறுதான் கண்டுள்ளது. 1 ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட பூமியில் வாதிக்கு 20 தென்னை மரங்களும் 2 கொழிஞ்சி மரங்களும் ஒதுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் வாங்கும்போது அது போன்ற மரங்கள் அங்கில்லை. தற்போது வாதி மரங்களை வைத்து பராமரித்து வருகிறார். 1982 ம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தில் பொது சரத்துக்கள் கண்டிருந்ததை படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 1982 ம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தில் வாதிக்கும் 1 ம் பிரதிவாதியின் நிலத்தில் 16 அடி அகலத்தில் தென் வடல் ரோட்டில் வாகனங்கள் ஓட்டி செல்ல வாதிக்கும் 1 ம் பிரதிவாதிக்கும் மட்டும் பொதுவானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் வாதி மற்றும் 1 ம் பிரதிவாதியின் பாக நிலங்கள் ஒன்று கொன்று சேர்ந்தாற்போல் இருப்பதால் தேவராஜன் பாக நிலத்தில் இருந்து ஈஸ்வரன் பாக நிலத்திற்கு மாமூலாய் போகும் கிழமேல் உத்தியில் உள்ள வாய்க்கால் வழிநடை பாத்தியமும் தென்னை மரங்களும் கொழிஞ்சி மரங்களுக்கும் போக வர உள்ள மாமூல் வழிநடை ஓடை வாய்க்கால் பாத்தியமும் உண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வாதிக்கும் 1 ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்து சம்மந்தமாக மேட்டுர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 323/2004 என்ற வழக்கு நடைபெற்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் பேரில் இந்நீதிமன்றத்தில் AS No. 5/2011 என்ற வழக்கு தாக்கல் செய்து 2012 ம் ஆண்டு இறுதியாக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட பின்னர் 7 வருடங்கள் கழித்து தாவா

சொத்தை விற்பனை செய்வதற்காக 1ம் பிரதிவாதி முயற்சி செய்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி விற்பனை செய்வதற்கு முன்பாக தாவா சொத்தை தங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்விக சொத்து என்பதால் தானே வாங்கி கொள்வதாக உள்ளூர் நபர்கள் மூலமாக வாதி 1ம் பிரதிவாதியிடம் கேட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு வாதி கேட்ட பின்னிட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதிக்கு வாதிக்கு தெரியாமல் கிரயம் செய்து வைத்துள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதி பெயரில் கிரயம் மட்டுமே பெறப்பட்டது என்றும் சுவாதீனத்தில் அவர் இல்லை என்றால் சரியல்ல. வாதியும் 4ம் பிரதிவாதியும் சேர்த்துதான் கம்பி வேலி போட்டதாக என்னுடைய பதிலுரையிலோ, 4ம் பிரதிவாதி போட்ட பதில் உரையிலோ சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம். நான் சொல்வது தவறு என்றும் நான் வழக்கிற்காக பதிலுரையில் சொல்லியுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு 2019 யில் தாக்கல் செய்தபோது என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தை பொறுத்து வாதிக்குதான் பூர்விக சொத்து என்பதால அவருக்கு தான் மேற்படி சொத்தை வாங்குவதற்கு முன்னுரிமை உள்ளதாக விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தில் சட்டத்திற்கு புறம்பாக 4ம் பிரதிவாதி சுவாதீனம் எடுக்க முயற்சி செய்வதாக நிரந்தர தடையுத்தரவு கோரி பரிகாரம் கோரியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதி 30.1.2019 ந்தேதி பெற்ற கிரயத்தை ரத்து செய்யக்கோரி செயலுறுத்துககட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மேற்படி விவரங்களை தெரிந்துகொண்டுதான் நான் 2020ம் ஆண்டு நான் 4ம் பிரதிவாதியிடம் இருந்து தாவா சொத்தை கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகள் ஆகியோர் சேர்ந்துகொண்டுதாவாவில் வாதி கோரியுள்ள பரிகாரங்களில் சிக்கல்கள் ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் 2020ம் வருடம் என் பெயரில் கிரய பத்திரம் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. 2020ம் ஆண்டு நான் பெற்ற கிரய பத்திரம் தாவா நிலுவையில் இருந்தபோது பெற்றதால் அது செல்லத்ததக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை 2019ம் வருடம் 4ம் பிரதிவாதி ரூ.7,50,000/- ரூபாய்க்கு கிரயம் பெற்றார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி கொடுத்த அதே தொகையை செலுத்தி தாவா சொத்தை வாதி கிரயம்

பெற தயாராக உள்ளார் என்றுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வழக்கு பற்றி எனக்கு தெரியாது. இந்தவ ழக்கு தாக்கல் செய்த பிறகு நான் பெற்ற கிரயமும் ரூ-7,50,000/- என்றால் சரிதான். உண்மையிலேயே தாவா சொத்தில் வாதியின் உரிமைகளுக்கு இடைஞ்சல் ஏற்படுத்த வேண்டுடம் என்ற கெட்ட எண்ணத்தில் தான் என் பெயரில் கிரய பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நானும் மேற்படி தாவா சொத்தில் இதுநாள் வரை சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய சுவாதீனத்தில்தான் உள்ளது நான்தான் விவசாயம் செய்து வருகிறேன். நான் கிரயம் பெற்ற பிறகு தாவா சொத்தில் வழக்கு நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக என் பெயரில் பட்டா மாற்றம் செய்தபோது நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள விவரத்தை வருவாய் துறை அலுவலகத்தில் தெரிவித்தேனா என்றால் இல்லை. நான் கிரயம் வாங்கி 3 மாதங்கள் கழித்துதான் வழக்கு நிலுவையில் இருந்தது தெரியும். வழக்கு நிலுவையில் இருந்தபோது பட்டா பெயர் மாற்றம் செய்துள்ளதால் அந்த ஆவணங்கள் வாதி வழக்கில் கோரியுள்ள பரிகாரங்களை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என் பூர்வீகம் மேட்டுர் என்றால் சரிதான். வாதி பிரதிவாதிகளை பொறுத்து நான் மூன்றாம் நபர் என்றால் சரிதான். தாவா சொத்து அமைந்துள்ள ஆலமரத்துபபட்டி கிராமத்தில் எனக்கு எந்த சொத்தும் பூர்விகமாக பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரிதான். எனது மனைவியின் ஊர் மூலக்கடை என்றால் சரிதான். மூலக்கடையில் இருந்து தாவா சொத்து சுமார் 2 கி.மீ தூரத்தில் இருக்குமா என்றால் அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீது உள்ள வீட்டின் கதவு எண் 8/41 ஆகும். கதவு எண் 8/41 என்ற எண் கொண்ட வீடு தாவா சொத்தில் இருப்பதாக நான் வாங்கிய கிரய பத்திரத்திலோ அல்லது 4ம் பிரதிவாதி வாங்கிய கிரய பத்திரத்திலோ இல்லை என்றால் சரிதான். ஆனால் வீடு உள்ளது. மேற்படி தேவராஜின் வீட்டு கதவு எண். 8/41 தான். மேற்படி தேவராஜ்ஜிற்கு கதவு எண். 8/41 என்ற எண்ணில் வீடு உள்ளது என்று ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 தாவா சொத்திற்கு சம்மந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. நான் வாங்கிய கிரய பத்திரத்தின் அசலையோ அல்லது எனக்கு விற்பனை செய்தவரின் பத்திரத்தின் அசலையோ நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. நகல் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பத்திரத்தின் நகலை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும்

இல்லை அது குறியீடும் செய்யப்படவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2019, 2022ம் ஆண்டு கிரய பத்திரத்தின் அசல் ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு என்ன காரணம் என்றால் தனிப்பட்ட காரணம் ஏதுமில்லை. நான் தாக்கல் செய்துள்ள கந்தாய ரசீது பி.வா.சா.ஆ.3 இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு பெறப்பட்டதால் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆதார் அட்டை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய விலாசத்தை நிரூபிப்பதற்காகதாக்கல் செய்துள்ளேன். என்னுடைய ஆதார் கார்டு 2013ம் ஆண்டு வழங்கப்பட்டது என்றால் சரிதான். ஆதார் அட்டையில் விலாசம் மாற்றப்பட்டது 2023ம் ஆண்டு என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் ஆஜராகி பதிலுரை தாக்கல் செய்த பின்னிட்டுதான் மேற்படி விலாசம் மாற்றப்பட்டது என்றால் சரிதான். ஆதார் அட்டையில் கதவு எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதனால் இந்த ஆதார் அட்டை வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாங்கும்முன்னுரிமை என்றால் என்ன அது யார் யார் கோரமுடியும் என்று சொன்னால் அதுகுறித்து எனக்கு தெரியாது. வாங்கும் முன்னுரிமையில் விவசாய நிலம் குறிப்பிடவில்லை என்று எந்த சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் வழக்கறிஞர் சொல்லி எனக்கு தெரியும். எந்தெந்த நிலங்கள் வாங்கும் முன்னுரிமையின் கீழ் அடங்கும் என்றால் எனக்கு நேரிடையாக தெரியாது. வழக்கறிஞர் சொன்னதன்பேரில் என் நிலம் குறித்து மட்டும் எனக்கு தெரியும். தாவா சொத்து உள்ள நிலம் வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் பூர்விகமாக பாத்தியப்பட்ட நிலம் என்றும், அதனால் வாதிக்குதான் தாவா சொத்தை வாங்குவதற்கு முன்னுரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிக்கும் பொதுவான பாத்தியம் உள்ளதால் 3ம் நபர் மேற்படி சொத்தை வாங்கினால் வாதிக்கு இடைஞ்சல்கள் வரும் என்பதால்தான் வாதி தாவா சொத்தை வாங்குவதற்காக முன்னுரிமை கோரினார் என்றால் சரியல்ல. வாதிக்கு இடைஞ்சல்கள் செய்யவேண்டும் என்பதற்காகதான் பிரதிவாதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து தாவா சொத்து சம்மந்தமாக பொய்யாக ஆவணங்களை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் தாவா சொத்தை வாங்கும் முன்னுரிமை உள்ளதால் 4ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரயபத்திரத்தை ரத்து செய்து வாதிக்கு கிரயம் செய்து கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. தாவா நிலுவையில் உள்ளபோது நான்

மேற்படி சொத்தை கிரயம் பெற்றது செல்லாது என்றால் சரியல்ல. அதனால் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

ஒம்/–செந்தில்குமார்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டுர்.